

13

பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்ருண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனர்.

கிளை—6 குருகுலம், [illegible]கம் ; விசய, மார்கழி; 18—12—53 தளிர்-9

[illegible] JAN 1954

குருகுலத்தின் குறிக்[illegible]ள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவ[illegible] தெரிவிப்பது

மறப்ப[illegible] எப்ப[illegible]?

நன்றியை மறப்பது நன்றன்[illegible] [illegible]ன்று தெரிவித்த ஆசிரியர், நன்றல்ல[illegible] அன்[illegible] ம[illegible]து [illegible]ன்று என்றும் முன்பு தெரிவித்தார். ஆனல், நன்றியை ம[illegible]தும் நன்றல்லதை மறக்க முடியாமல் இருப்பதும் [illegible]ல் பெரும்பாலும் காணப்படுகிறது. ஆசிரியர் தெரிவித்த கருத்திலே அதற்கு வழி இருக்கிறது. நன்றியை மறக்காமல் இருந்தால் நன்றல்லதை மறக்கும் திறன் வந்துவிடும். இந்த உண்மையைக் 'கொன்றன்ன இன்ன செயினும் அவர் செய்த ஒன் நன்று உள்ளக் கெடும்' என்றுபதில் ஆசிரியர் தெரிவித்திருக்கிறர்.

ஆனல், நன்றியை மறவாமல் இருப்பதற்கு வழி எப்படி? அது கடினமாய் இருக்கிறதே என்று நினைப்பவர்க்கு ஆசிரியர் பல நன்றிகளில் ஒரு நன்றியையேனும் நினைக்கலாம் அல்லவா என்று அதில் எளிமையை நினைப்பூட்டுகிறர். "நன்று ஒன்று உள்ள" என்று ஆசிரியர் குறிப்பதிலிருந்து இவ்வுண்மை தெரிகிறது.

'பல காக்கைக்கு ஒரு கல்' என்று ஒரு பழமொழி உண்டு. அது போல, பல தீமைகளை மறக்க ஒரு நன்மையை நினைத்தால் போதும். பல தீமைகளை வெல்லும் அவ்வளவு பெரிய ஆற்றல் நன்மை என்பதற்கு உண்டு என்பது இதனல் தெரிகிறது. இதில் தெளிவு இல்லாமையினலேதான் நன்மைகளில் மக்கள் உறுதியாய் இருப்பதில்லை. தீமைகள் என்று தெரிந்தும் அவைகளை முறியடிக்க வழி பெறுவதும் இல்லை.

குற்றமே இல்லாத மக்கள் உலகத்தில் இருப்பது அருமை. குணமும் குற்றமும் மக்களிடத்தில் கலந்தபடிதான் இருக்கும். குணத்தை மிகுதியாகப் பெருக்கிக் குற்றத்தைக் குறைத்துக் கொள்ள நன்மக்கள் முயன்று வருகிறர்கள். இந்நிலையில் நன்மையும் தீமையும் செய்வது, உலகத்தில் வழக்கமாக இருக்கிறது. ஆதலால் ஒருவர் செய்த நன்மையை மறவாமல் இருக்கவும், தீமையை அவ்வப்போதும் மறந்துவிடவும் நாம் பழகிக்கொள்ளவேண்டி இருக்கிறது. கொலைசெய்தால் ஒத்த தீங்குகளை மற்றவர்கள் செய்தாலும் அவற்றையும் உடனே மறக்கப் பழகிக்கொள்வதுதான் நல்லது.

கொன்று அன்ன இன்ன
செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

கொன்று அன்ன இன்ன செயினும்—முன்னல் நன்மை செய்தவர் பின்பு கொன்றலொத்த தீமைகள் செய்தாலும், அவர் செய்த ஒன்று நன்று உள்ளக் கெடும்—முன் அவர் செய்த நன்மை ஒன்றை நினைக்க அவர்மேல் வருத்தம் நீங்கும்.

நன்றிமறவாமல் இருப்பதற்கு இது வழி கூறியது; மக்கள் குற்றமும் குணமும் உடையவராதலின் அவர்கள் நன்மையும் தீமையும் கலந்தபடியே செய்யும் இயல்பினராக, அவர்கள்பால் வருத்தமும் மகிழ்ச்சியும் உண்டாகுமிடத்து, வருத்தத்தை நீக்கிக் கொள்ள அவர்கள் செய்த நன்மையை நினைத்து வருக என்று இதனல் முறை ஒன்று கூறினர்.

'கொன்றுஅன்னஇன்ன' என்றமையால், அல்லாத இன்ன எளிதில் மறக்கப்படலாம் என்பது தானே பெறப்பட்டது. 'ஒன்று உள்ள' என்றதனல் தீமை பலவற்றிற்கும் இருக்கும் வலிமையை விட நன்மை ஒன்றுக்கு இருக்கும் வலிமை மிகுதி என்பது இனிது விளங்கும்; தானே கெடுதலின் 'கெடும்' என்றர்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	விசய, மார்கழி,	தளிர்
6	18-12-53 வெள்ளி	9

சில காரணங்கள்....!

நம் தெய்வத் தமிழ் நாட்டில் இன்று இளைஞர் பலரால் கடவுட் கொள்கையும் அதாவது சமயமும், அதனைச் சார்பான செயல்களும் பெரிதும் கண்டிக்கப்படுகின்றன. இந்நிலை எய்தியதற்குரிய சில காரணங்கள் கீழே குறிக்கப் பெறுகின்றன. இவற்றையும், இவை போன்ற வேறு காரணங்களையும் சமய வளர்ச்சியிற் கருத்துடையவர்கள் ஆராய்ந்தறிந்து ஒன்றுபட்டு நீக்க முயல வேண்டும்.

1. கடவுட் கோயில்களும், அவற்றை ஓம்பும் மடங்களும் நம் நாட்டில் ஏராளமாக இருக்கின்றன. ஆனாலும் அவைகள் பொதுமக்களோடு தொடர்பு கொண்டு காலத்துக் கேற்றபடி சமய உண்மைகளையும் சடங்குகளையும் விளக்காமல் ஏதோ சம்பிரதாயப்படி நடந்துகொண்டிருக்கின்றன. அதனால் பொது மக்களில் பலருக்கு வெறும் மூட பக்தியும், மூடப் பழக்க வழக்கங்களும் வளர்ந்தனவே ஒழிய உண்மைகள் விளங்கவில்லை.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் கோட்டில் நிற்கவேண்டிய சமய நிலையங்கள் தாம், இன்று நாட்டில் உள்ள பிறப்பால் உயர்வு தாழ்வு பாராட்டப்படும் பல்வேறு பிரிவுகளுக்கும் காரணம் என்று எண்ணும்படி இருக்கின்றன.

'முழுமுதற் கடவுள் ஒன்றே' என்பது எவருக்கும் ஒப்ப முடிந்த உண்மையாக இருக்க அத்தெளிவு உண்டாக்கும் முறையில் பல்வேறு கடவுட் கதைகளையும் திருவுருவங்களின் உண்மைக் கருத்துக்களையும் மக்களுக்கு விளக்குவாரில்லை. அதனால் எத்தனையோ குழப்பங்கள்!

ஆயிரமாண்டுகளுக்கு முன் தோன்றி, இந்நாடு முழுதும் எண்ணற்ற திருக்கோயில்கள் எழும்புமாறு அருளாளர்களால் இசைக்கப் பெற்று இன்றுகாறும் நின்று நிலவும் தேவார திருவாசகம் திருவாய் மொழி முதலிய அருண் மொழிகளுக்குத் திருக்கோயில்களில் முதலிடம் தரப்படவில்லை.

சமயம் இருமை வாழ்க்கைக்கு வழிகாட்டுவது என்று எண்ணும்படி இல்லாமல், 'அது மறுமை நலத்தினை மட்டுமே கூட்டுவது, இம்மைக்கு உதவாதது' என்று நம்பும்படி சடங்குகளும் போலித்துறவு முதலிய கொள்கைகளும் மலிந்து கிடக்கின்றன. மொழிவகைச் சடங்குகளையும், திருக்கோயில் பூசைகளையும் செய்யும் பேறு பெற்றவர்கள் உள்ளபடியே உயர்ந்தவர்கள்தாம். ஆனாலும் 'பணியுமாம் என்றும் பெருமை' என்றபடி மற்றவர்களை அன்புக் கண் கொண்டு முன்னேற்ற முயலாமல், தாமும், தாம் செய்யும் சடங்குகட்கான மந்திர மொழியையும் எல்லாம் ஏதோ ஒரு தனிப்பட்ட பிரிவைச் சேர்ந்த தன்மைபோலக் கொண்டு இயங்கி வருகிறார்கள்.

வாழ்வியலையும் பக்தியையும் வளர்க்கும் இந்நாட்டு நாயன்மார்களின் வரலாறுகளைக் கூறும் பெரிய புராணம் போன்ற நூல்களுக்தும், திருக்குறள் முதலிய அற நூல்களுக்கும் போதிய விளக்கமும் விளம்பரமும் கொடுக்கப்படாமல், திருப்பித் திருப்பி இராமாயணம் பாரதம் முதலிய இதிகாசங்கட்கே கொடுக்கப்படுகின்றது.

உயர்ந்த இனத்தவர் என்று போற்றப்படுபவர்கள் இந்நாட்டிற் றோன்றிய முற்கால பிற்காலப் பெரியோர்கள் அருளிய தேவார திருவாசக திருவாய்மொழிகளையும் தாயுமானார், பட்டினத்தார், இராமலிங்க அடிகள் போன்றோர் அரும்பாடல்களையும் போற்றிப் பயின்று பரப்ப வேண்டியிருக்க, மற்றவர்கள் அவைகளை மதித்துப் போற்றிப் பயிலும் அளவுகூடத் தாம் மதித்துப் போற்றிப் பயிலாமல் இருக்கிறார்கள்.

'பொதுமை' 'பொதுமை' (சமரசம்) என்று போலிப் பொதுமை பேசி வாழ்க்கையில்

அம்பலவாணர்

(சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தில் திருவாதிரை நாள் 24-10-50 அன்று அருளப்பெற்றது).

அம்பலவாணர் எனில் சபையில் வாழ்கிறவர்கள் என்று பொருள். வாணர் என்பது வாழ்நர் என்பதன் திரிபு. வீழ்நாள் வீணாள், வாழ்நாள் வாணாள் என்பது போல வந்தது. அம்பலம் என்பது வெளி; பழைய காலத்தில் திறந்த வெளியில் மரத்தின் நிழலில் சபை கூட்டுவர். நம் முன்னோர் கட்டியிருக்கும் பெருங் கோபுரங்களையும் பெருங் கோயில்களையும் பார்க்கும் நாம் அவர்களுக்குக் கட்டிடம் கட்டத் தெரியாது என்று கூற முடியாது. ஆயினும் வெட்ட வெளியில்தான் எல்லோரும் கூடிப் பலர் அறிய நியாயம் கூறுவர். அறத்தைக் கடைப்பிடித்து நியாயம் வழங்கினர்; சபை என்பதற்கே 'நியாய சபை' 'சட்ட மன்றம்' என்று கூறலாம். நியாயமாகக் காரியம் நடப்பது அம்பலத்தில் நடப்பதாகும். இதனால் அம்பலக் கூத்தனுக்கு அறவன், அறவோன் என்ற பெயர்கள் உண்டு. பலர் கூடும் வெட்ட வெளியில்தான் கூத்துகள் நடக்கின்றனவாதலின் அம்பலவாணர் கூத்தும் மன்று என்னும் அம்பலத்தில் நடக்கிறது.

கூத்து என்பது எல்லார் செயல்களையும் தொலைத்துக் கொண்டு அதனூடே புகுந்து வேண்டாதவர்களிடையிலும் காரியம் செய்யும். விளங்காதவர்களுக்கும் விளங்கும்படி செய்யும். அம்பலவாணர் வரம்பான இடத்தில் இல்லாமல் வரம்பற்ற வெட்டவெளியில் வாழ்பவராதலால் நாம் வரம்பு உள்ளவராயிருந்தால் நம்மிடையில் வாழமாட்டார். விரிந்த மனப்பான்மையும், சிறந்த ஒழுக்கமும், எல்லோரும் ஒன்று எனக் கருதும் ஆன்மநேய ஒருமைப்பாடும் பொருந்திய வாழ்க்கை நடத்தினால் அம்பலவாணர் கூத்து நம்மிடையில் நடக்கும்.

கோயிலின் உள்ளே சென்றால் கர்ப்பக் கிருகத்தில் லிங்கத்தையும், அதைச் சுற்றிப் பிராகாரங்களில் பல மூர்த்திகளையும் பார்க்கிறோம். நடுவில் இருக்கும் லிங்கவடிவானவர் சதாசிவர்; அருவுருவானவர். இவரிலிருந்து தோன்றிய உருவமூர்த்திகளே தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், நடேசர் முதலியவர்களாகும். இம்மாதிரி 25 [illegible] உண்டு இ[illegible] மூர்த்திக[illegible] அசைய[illegible] ஒன்றே அசைந்து வேலை செய்கிறது என்பதை ஞாபகப் படுத்தவே சுற்றிலும் 25 மூர்த்திகளை வைத்திருக்கின்றனர்.

இம் மூர்த்திகளில் நடராஜர் ராஜா. விநாயகரை விநாயக ராஜா என்று கூறுகிறோமோ? அசைந்து ஆடுந் தெய்வத்தையே ராஜா என்கிறோம். சதாசிவர் கிழக்கு பார்த்த மாதிரி இருந்தால் நடராஜர் தெற்கு பார்த்தவராக இருப்பார். தெற்கைப் பார்த்த வண்ணமாகவே நடனம் ஆடுகிறார். வள்ளலார் எல்லோரையும் கூறி இவர்களுக்கும் மேலாக நின்று ஆடுகின்ற சேவடியை யார் அறிவார்காண்தோழி என வினவுகிறார். பணி செய்பவரல்லவா பலருக்கும் விருப்பமுள்ளவராக இருப்பார். வரம்புற்ற கட்டிடத்தில் இருப்பவர் விசாலமாக இருக்கமுடியுமா? சிறு வீட்டில் ராஜா இருப்பாரா? மிகப்பெரிய வீடாகிய அரண்மனையில்தானே ராஜா இருப்பார். அரசனுக்கே இப்படி என்றால், அரசர்களுக்கும் அரசாய் விளங்கும் நடராஜா எங்கு இருப்பார்? வெட்ட வெளியே அவருக்கு உகந்த இடம்.

(வரும்)

எதனையும் தாமறிந்து போற்றி உயரும் உயர்வு நெறியில் மக்களைச் செலுத்தாமல் எல்லாம் ஒன்றே என்று தெளிவில்லாமல் எண்ணிக் குழப்பத்தை மிகுத்துக் கொள்ளும்படி செய்யப்படுகிறது.

ஒரே சமயத்தைப் போற்றுவதற்குள்ள பல்வேறு சமய நிலையங்களின் தலைவர்களும் தமக்குள் இணைப்பு ஏதும் ஏற்படுத்திக்கொள்ளாமல் தனித்தனியே தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம் செயலாற்றி வருகின்றனர். இவைகளெல்லாம் ஒழுங்குபடுதலே நாட்டுக்கு நலம் தரும்.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

மொழித் துறை

* ஈரடி இருநூறு *

நூலாசிரியர் – திரு. சே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.
(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

அதிகாரம் 12.

ஐயம்

அஃதாவது மனத்தின்கண் நிகழ்வதோர் இயல்பாகிய துணிவின்மை கூறுதல். இவ்வதிகாரத்தில் ஐயம் பெரும்பாலான செய்யுட்களில் பற்பல உவமைகளுடன் விளக்கப்பட்டமை அறிந்து இன்புறுதற்குரியது. தனிமையும் அதனால் அமைதியுமாகிய மன நல னுடையார்க்கு அதன்கண் களைதற் குரியதாய் இடையே எழுவதோர் இயல்பு இன்னதெனக் கூறிச் செல்லுதலின் ஈண்டிதனை விளக்கினர்.

1. சற்றும் நிலையற்றுச்
சார்ந்தாரை உள்ளிழுத்துச்
சுற்றுங்காண் ஐயச் சுழல்.

சிறிதும் நிலைத்தலில்லாமல் தன்னைச் சார்ந்தாரைத் தன்னுள்ளே இழுத்து ஐயம் என்னும் நீர்ச்சுழல் தனது வேகத்தால் அவரைச் சுற்றியலைக்கும்.

காண், முன்னிலை அசை; தானும் நிலைதலற்றுச் சார்ந்தாரையுஞ் சுற்றியலைக்குமென்றது காரண காரியமாய் நின்றது. அறிவு ஊனிலாதார் ஐயச் சுழலுக்கு இரையாதலின், 'சார்ந்தாரைச் சுற்றும்' என்றார்.

2. அரிதாம் கரைசேர்தல்
ஐயம் பெருகின்
விரிநீரில் வேர்நிலைத்தல் இல்.

ஐயம் மிகுந்தால், கடலாகிய அதனில் நிலை கொள்ளவில்லை; அதிலிருந்து கரை சேர்தலும் இல்லையாம்.

விரிநீரென்றது கடல்; நிலை கொள்ளலை வேர் நிலைத்தல் என்றார். அருமை, ஈண்டு இன்மை உணர்த்திற்று. ஐயத்தை விரிநீரென்றமையின் அதன் கரையென்றது தெளிதலை யென்க. முன்னைச் செய்யுளில் ஐயம் ஆற்று நீராகவும் இச் செய்யுளிற் கடல் நீராகவும் உருவகிக்கப் பட்டது.

3. ஆய்வின் வழிமறித்தார்
ஐயம் அயற்சென்று
பாய்ந்தேறிப் பற்றிற் றிடம்.

ஆராய்ச்சியின் வழியைத் தடுத்தார்க்கு ஐய உணர்வு அவ்வாராய்ச்சி நெறியின் அயலாகச் சென்று பாய்ந்து ஏறி அவரது அறிவின் இடத்தைப் பற்றி அமர்ந்துகொண்டது.

பற்றுதல் ஈண்டுப் பற்றி அமர்ந்து கொள்ளுதலென்க; ஆராய்ந்து அமர்ந்து ஆட்சி புகுந்ததென்பது கருத்து. ஆராய்ந்து தேறுத லில்லாரை ஐயம் பற்றி அலைவுறுத்துதலின் இவ்வாறு கூறினர். ஆய்தலின் இன்றியமையாமை "தேரான் தெளிவும்" என்பதனானும் பெறப் படும். ஆய்வு நெறியே உரிய நெறியாதலின் அல்லாத நெறியை 'அயல்' என்றார். இடமென்றது அறிவை; ஆய்வுக்குரியது அஃதாதலினென்க.

4. ஆய்தல் அணுகா
அடவியின்கண் ஐயமே
மேயும் மிதித்தும் அடும்.

ஆராய்தல் என்பது செல்லாத காட்டில் ஐயமென்னும் யானையே அதன் செழிப்பை மேயும்; காலால் மிதித்தும் அழிக்கும்.

ஆய்தலில்லாத விடத்திற் பல தலையான நினைவுகள் கிளைத்துச் செறிதலின் அந்நினைவுகள் செறிந்த உள்ளத்தை அடவி என்றார். அந்நிலையில் ஐய உணர்வு பெருகுவும் அடக்கலாகாப் பெருவலிவுங் கொண்டு நிகழ்தலாலும், தெளிந்த நினைவுகளைக் குறைத்தலாலும், ஒரோவொரு கால் அவற்றை முற்றும் அழித்தலாலும் அஃது யானை யெனப் பட்டது. யானைக்கு மேயுஞ் செயலும் மிதித்தடுஞ் செயலும் உரியவாதல் "வாய் புகுவதெனினுங் கால் பெரிது கெடுக்கும்" என்னும் புறநானூற்றானும் பெறப்படும்.

5. மெய்புலர ஓடும்
விதிர்விதிர்த் துள்அடங்கும்
ஐயப்பேய் ஆடுமா றற்று.

தனதுடம்பு உலரும்படி பலமுகமாகத் திரியும்; ஒரோவொரு கால் நடுநடுங்கி அறிவினுள் அடங்கும். ஐயமென்னும் பேய் ஆடும் வகை அத்தன்மையது.

பல தலையாக அலைந்த ஐய உணர்வு பின்னர்க் கெடுதலின் 'மெய் புலர்' என்றும், தேறிய பின் நிலை பெறுதாய் உறுதி குலைந்து அறிவின்கண் அடங்குதலின் 'விதிர் விதிர்த்துள் அடங்கும்' என்றுங் கூறினர். பெரிதும் நன்மைக்கு மாறுவனவும் அச்சத்திற் கேதுவாவனவும் பயத்தலின் 'ஐயம்' பேய் எனப்பட்டது. இவை ஐந்து பாட்டானும் ஐயத்தின் இயல்பு விளக்கினர்.

6. ஐயம் அளவிற்
றறிவுடையார் கண்ணே
பையச்சென் றேங்கும் பிறர்க்கு.

அறிவுடையாரிடத்து ஐயவுணர்வு ஓர் அளவுடையதாய் நிகழும்; அல்லாதாரிடத்து அது மெல்ல மெல்ல விரிவடைந்து மிகும்.

ஐயத்தை அடக்கியாளும் அறிவு பிறர்க்கின்மையின் அவ்வாறாயிற்று. செல்லல், ஈண்டு அகலலென்னும் பொருட்டு; "உரை செல முரசு வெளவி" (புறம், 26) என்றார் பிறரும்.

7. இரவின்றேல் ஏதோ
எரிநிலா! எண்ணில்
ஐயமின் றில்லை அறிவு.

இரவென்பதில்லையாயின் ஒளிகாலும் நிலவு விளங்குதலேது? அதுபோலப் பல ஐய நினைவுகள் இன்றாக, அறிவும் விளங்குதலில்லை.

இந்த எடுத்துக்காட் டுவமை எரித்தல், ஒளி வீசுதல். பல தலையாக நிகழ்தலின் 'எண்ணில் ஐயம்' என்றார். 'இன்றி' யென்னும் செய்தெனெச்சக் குறிப்பு வினையின் இறுதி, செய்யுளாகலின் உகரமாகத் திரிந்து நின்றது; இகரம் உகரமாதல் "செய்யுளுள்.. உரித்தே" என்பர் தொல்காப்பியர் (உயிர்மயங், 35) "திறனன்று மொழியினும்" என்றார் பிறரும் (புறம். 124); ஐய நிகழ்ச்சி அறிவின் தோற்றத்திற் கேதுவாதலின், "ஐயமின் றில்லை அறிவு" என்றார். வருஞ் செய்யுளானும் இது வலியுறும்; இதனால் அறிவின் விளக்கத்திற்கு ஐயம் ஏதுவாதல் கூறினர்.

8. ஐயந்தருவ தறிவே
அறிவிற்குள்
ஐயம் அடங்கு மெனின்.

அறிவின் ஆட்சிக்குள் ஐய நினைவு அடங்கி நிகழுமாயின், ஐயம் ஒருவற்கு உண்டாக்குவது அறிவேயாம்.

அடங்கி நிகழாதாயின், அறிவின் விளக்கத்திற்குக் காரணமாவதின்றி அதனை மேயும்; மிதித்தும் அடும்.

ஏகாரம் பிரிநிலை. இவை இரண்டு பாட்டானும் ஐயம் வரம்புடையதாய் நிகழ்தலின் பயன் கூறினர்.

9. அறிவுழுத பின்புலத்தில்
ஐயம் முளைக்கும்
நெருப்பின்றே நேரும் புகை.

நெருப்பில்லாமலோ புகை தோன்றும்? அதுபோல், அறிவென்பது உழுதபின் உள்ளமென்னும் நிலத்தில் ஐய நினைவென்னுங் களைகள் முளைக்கும்;

ஈதும் எடுத்துக்காட் டுவமையாம். நெருப்புண்மை யின்றிப் புகையில்லையாதல் போல அறிவுண்மையின்றி ஐயமுமில்லையென்றார். அறிவு நிகழ்தலாலேயே ஐயமும் நிகழ்தலினென்க. ஆராய்தல் ஈண்டு உழுதலெனப்பட்டது, அதன் அரிய முயற்சியை நினைந்து. ஓகாரம், வினா

10. அறிவு தருமகவு
ஐயமாம்; ஐயம்
அறிவின்தாய் ஆவ தெவன்?

ஐயமென்பது அறிவு ஈனுகின்ற குழந்தை; அவ்வாறிருக்க அவ்வையம் அறிவிற்குத் தாய் ஆவதேன்?

தகாதார் மா[illegible] அறிவு [illegible] தைபோல் [illegible] தாய்போற் பேருருக்கொண்டு வலிவுடையதாய்த் தோன்றலின், அவர்தந் தகுதியின்மையே அவ்வாறு தற்குக் காரணமென்று புலப்படுத்தினர். தோற்றத்தின் முன்பின் நிலை கருதியது முதலடி; "அருளென்னும் அன்பீன் குழவி" என்புழிப் போல; வன்மை மென்மை கருதியது பின்னையடி. எவனென்னும் வினா, 'அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத் தெரிந்த கிளவி" (தொல். கிளவியாக். 33); ஐயமென்னுஞ் சொல்லே மெலிந்த உணர்வெனும் பொருளுடையதாகலின் அது தாயாதல் சாலாமையின் 'ஆவதென்' என்றார். இவையிரண்டு பாட்டானும் ஐயத்தை அடக்கி ஆளும் அறிவின் சிறப்புக் கூறினர்.

Phone 55034. Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
[illegible] கிடங்குத் தெரு, சென்னை 1.

குருகுலச் செய்தி

* செய்தவமும், சீரியரும் *

குருகுலம் திருக்குறட் செயலகம்:

நம் குருகுலம் 'திருக்குறட் செயலகம்' என்பது முன்னரே பலகால் பலமுகமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிகாரத்திற்கோர் 'ஏகர்' ஆக (சில அதிகாரங்களுக்குச் சற்றுக் கூடுதல் நிலையில்) ஏறத்தாழ 150 ஏகர் நிலப்பரப்பில் அவ்வவ்வதிகாரச் செயல் முறைகளும் கூடிய மட்டும் நிகழ்த்திக் காட்டப்படும்.

ஆசிரியர் கருத்து:

அடிநிலப் பகுதிகளை ஒழுங்கு செய்து அதிகார வாரியாக அவற்றைப் பிரித்துக் குருகுல மாணவர்களில் முன் வந்து ஏற்றுக் கொள்ளும் 133 பேரிடம் அவரவர் விரும்பும் அதிகாரப் பகுதிகளை ஒப்படைத்துச் செயல் முறைகளை அறிவுறுத்துக் கொண்டு திருவருட் சிந்தனையோடு புறத்தே ஆமையும் இடத்தில் அமைதியாக இருக்கவேண்டும் என்பது ஆசிரியர் கருத்து.

அன்பர்களின் முன் வருகை:

நிலங்களிற் பெரும்பகுதி ஒழுங்கு செய்யப்பெற்றிருக்கிறது. அதிகாரப் பொறுப்புகளை ஏற்பதாகக் குருகுல மாணவரிற் சிலர் முன்வந்திருக்கிறார்கள். இயன்றவர்கள் இயன்றபடி செயலுக்குத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஐயமும் கேள்வியும்:

இந் நிலையில், குருகுலத்தைப் பற்றிக் கேள்விப்படுகிற பல அறிஞர்களும் அன்பர்களும், 'திருக்குறளின் ஒவ்வோர் அதிகாரத்தையும் எப்படிச் செயற்படுத்த முடியும்? இதுவரை யாம் எங்கும் கேட்டிராத ஒரு புதுமையாக இது இருக்கிறதே! என்றெல்லாம் கேட்கிறார்கள்; கேட்பதும் இயல்பு; கேட்கவேண்டுவதும் கட்டாயந்தான்;

அறன் வலியுறுத்தல், விருந்தோம்பல், தவம் கல்வி இது போன்றுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்தலாம்; பண்பளவாக உள்ள அன்புடைமை, அருளுடைமை, தெரிந்து தெளிதல் முதலியவற்றையும், காமத்துப்பால் அதிகாரங்களையும் எப்படிச் செயற்படுத்துவது?

இத்தகைய கேள்விகளைப் பலர் பல நேரங்களில் கேட்கிறார்கள். ஐயம் நீக்குவது என்பதும் பலர்க்கும் பல நேரங்களில் விளக்குவதும் இயலாததாக இருத்தலின், எல்லா அதிகாரங்களையும் எப்படிச் செயற்படுத்துவது என்று முதலில் சுருக்கமாகவேனும் எழுதிக் கொடுத்துவிட வேண்டும் என்று ஆசிரியரை அன்பர்கள் வேண்டிவந்தனர்.

ஆசிரியரின் செய்தவம்:

அன்பர்களின் வேண்டுகோளை நிறைவேற்றும் திருவுளத்தோடு ஆசிரியர் அவர்கள், சென்னையில் தங்கும் நாட்களிலெல்லாம் திருமயிலையில் உள்ள திருவள்ளுவர் திருக்கோயிலில் திருக்குறள் வழங்கிய தெய்வப் புலவரின் திருமுன்னிலையில் இருந்து ஒவ்வோர் அதிகாரத்துக்குரிய செயல் முறைகளையும் தொகுத்து எழுதிக்கொண்டு வருகிறார்கள். இயல்பிலேயே ஆழ்ந்தகன்றுயர்ந்த செந்தமிழ்ப் புலமையும் அன்றமைந்தடங்கிய கொள்கைச் சான்றாண்மைப் பண்பும் உடைய ஆசிரியர் அவர்கள், தேவர் திருமுன்னிலையில் நாகலிங்க மரத்தின்கீழ் அமைதியாக இருந்து, திருமூலர் அரசடியில் இருந்து திருமந்திரம் எழுதியது போல் தமிழ்மறைச் செயல் முறைகளை எழுதுகிறார்கள் என்றால், அது தமிழகத்துக்காக, என்? உலகப் பொது மறையாதலின், உலகத்துக்காக ஆசிரியர் அவர்கள் செய்கின்ற தவம் என்று சொல்வதில் தடை என்ன இருக்கிறது!

ஆசிரியர் இவ்வாறு முடிவு செய்ததற்குக் காரணம், திருக்குறளுக்கும் செந்தமிழுக்கும் தொண்டு செய்வதே வாழ்க்கைக் கடமை எனப் பூண்டு கொண்டாற்றி வருபவரும், மயிலைத் திருவள்ளுவர் திருக்கோவில் திருக்குறள் அற நிலையத்தைச் சார்ந்த முதல்வருள் ஒருவருமாகிய திருக்குறள் தொழும்பர் திரு. ஆ. கஜபதி நாயகர் B. A. B.L., M.L.C. அவர்களின் குறிப்பிற் குறிப்பறியும் திறமேயாகும்.

திருக்குறள் தொழும்பரின் திறம்:

அன்பர்கள் வேண்டுதலையும், ஆசிரியரின் கருத்தையும் அறிந்த அவர்கள், 7-12-53 ஞாயிறன்று காலையில் ஆசிரியரைத் தம் திருக்கோயிலில் வழக்கமாக நடைபெறும் திருக்குறள் வகுப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஒன்றைச் செய்யுமாறு அழைத்து, அப்போதே அவர்கள் விரும்பும்போதெல்லாம் அங்கே வந்து அமைதியாக இருக்கலாம் என்று சொல்லி, அதைப் பெரும்பேறாகக் கருதி ஏற்கும் அற நிலையத்தாரின் ஆர்வத்தையும் இசைவையும் கூடத் தெரிவித்து, திருக்கோயில் ஊழியர்களையும் ஆசிரியர் வருகிற காலங்களில் ஏற்றன செய்யுமாறு ஊக்கிவிட்டார்கள்.

இவ்வாறு ஒரு வாய்ப்பை வரவேற்று வழங்கி ஆசிரியரையும் பயன்படுத்திக் கொள்ள முன்வந்த வள்ளல் திரு கஜபதியாரின் உள்ளமுவக்க, அது முதலே ஆசிரியர் மயிலைக் கோவிலில் தங்கத் தொடங்கிவிட்டார்கள்.

சென்ற கிழமை வெளிவந்த செயல் முறை:

இனி, முன்னமே முதல் ஐந்து அதிகாரச் செயல் முறைகளை ஆசிரியர் முல்லைக் கொடியில் ஒருவாறு தொகுத்தெழுதி வெளியிட்டிருக்கிறார்கள். ஆதலின் திருவள்ளுவர் திருக்கோயிலில் தங்க நேர்ந்த சென்ற கிழமையில் ஆறாவது அதிகாரமாகிய 'வாழ்க்கைத் துணை நலம்' பற்றிய செயல் முறைகளைத் தொகுத்தார்கள். தாம் வகுத்த வாழ்க்கைத் துணை நலம் அத்தனையும் அமைந்த வாசுகியம்மையாரோடு எழுந்தருளியுள்ள வள்ளுவர் திருமுன்னிலையில் வரையப் பெற்ற அவ்வாழ்க்கைத் துணைநலச் செயல் முறைகளின் தொகுப்பு சிறப்பாய் அமைந்திருக்கின்றது.

அம்மையார் ஒருவரின் அருமை:

நிற்க, திருவள்ளுவர் கோயிலில் தங்கத் தொடங்கிய முதல் கிழமையிலேயே ஆசிரியர் அவர்களிடத்து மிக்க ஈடுபாடுடைய குருகுலத் தாயார் (குருகுலப் பாட்டி வள்ளியம்மையார் என்பது அன்பர்கள் அறிந்ததே) காட்டரண்பாக்கம் திருமதி. ஜெயலட்சுமி அம்மையார் அவர்கள், 'நீத்தார் பெருமை'யை ஆசிரியர் தம் மாணவர் புடை சூழ அமைதியாய் விளக்கிக்கொண்டிருக்கிற காட்சியொன்றைத் தம் கனவில் கண்டு, இதுகாறும் தாம் முடிவு செய்யாதிருந்த அதிகார ஏற்புச் செயலில் ஒரு முடிவுக்கு வந்து, சற்றும் எதிர்பாராத வகையில் ஆசிரியரைத் தேடிக்கொண்டு சென்னைக்கு வந்துவிட்டார்கள். நீத்தார் பெருமை என்னும் அதிகாரச் செயலைத் தாம் ஏற்பதாகச் சொல்லி, ஆசிரியருடன் திருவள்ளுவர் திருக்கோயிலுக்குக் குருகுல அன்பர் சிலர் புடைசூழ வந்து, தேவர் பெருமானுக்கும், அவருடன் எழுந்தருளியுள்ள திருவேகம்பருக்கும் அருச்சனை செய்வித்து உரிய திருக்குறள் அதிகாரச் செய்கையை மேற்கொண்டு மகிழ்ந்தார்கள். அதோடு, தம் அதிகாரத்திற்குரிய செயல் முறைகளை மீண்டும் ஒரு முறை சிந்தித்து அவ்வருட்டிருமுன்னிலையிலேயே சொல்லவேண்டும் என்றும், அவைகளைத் தாமே எழுதிக் கொள்வதாகவும் கேட்டுக் கொண்டார்கள். ஆசிரியர் அவர்களும் அவ்வாறே அவ்வதிகாரச் செயல் முறைகளை ஆழ எண்ணித் தெரிவித்தார்கள்.

மற்றோர் அம்மையின் மாட்சி:

திரு ஜெயலட்சுமி அம்மையார் அவர்கள், 'அதிகாரப் பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்கள் அதை ஆசிரியரிடம் தம் வாய்ப்புக்கேற்பத் தெரிவித்துவிடுவதைவிட, இப்படி எல்லாம் ஒரு நற் சூழலை ஏற்படுத்தி, நல்லிடங்களில் சிறப்பாகத் திருவள்ளுவர் திருமுன்னிலையிலேயே ஏற்பது நல்லது' என்பது போல ஒரு வழி காட்டிய நேரத்தில், அவர்களோடு உடன் வந்த அவர்களின் தமக்கையார் காட்டரண்பாக்கம் கமலம்மாள் அவர்களும் முன்வந்து அதே இடத்தில் 'அறன்வலியுறுத்தல்' என்னும் அதிகாரச் செயல் முறைப் பொறுப்பைக் ஏற்றுக்கொண்டார்கள். திருக்குறளின் உயிர்ப்பான, நீத்தாரின் பெருமைக்குக் காரணமான, அதிகாரம் இது.

திருவள்ளுவரின் தெய்வப் பெற்றி:

நிற்க, உலகுக்கு ஒரு நூலாய், உயர்ந்த நூலாய்ப், பெரு நூலாய் உள்ள திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர்தாம் முதன் முதலில் 'தெய்வப்புலவர்' எனச் சங்கப் புலவர்களால் போற்றப்பட்டனர். அவரை அடுத்தே நக்கீரர் போன்ற சங்கத்தின் தலைமைப் புலவர்கட்கும் தெய்வப் புலவர் என்ற வழக்கு வந்திருக்கின்றது. திருவள்ளுவர் உண்மையிலேயே தெய்வப் பெற்றியுடையவர்தாம் என்பது அவர் அருளிய திருக்குறளினாலேயே தெரிகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அந் நூலின் பெருமையும் புகழும் இன்றும் நின்று நிலவுகின்றது. ஏன்? பெரிதும் வளர்ந்து வருகின்றது!

அதன் தொடர்பான முயற்சிகளை அவர் திருமுன்னிலையிலிருந்து உண்மையான ஈடுபாட்டுடன் செய்கின்றபோது அவை மிக மாட்சிமைப்படுகின்றன.

சீரியர்கள்:

இவ்வகையான வளர்ச்சிகட்கு ஆசிரியரின் செய்தவம், மூலமாக இருந்து வருகின்றது; திருவருள் துணையாக இருக்கின்றது. குருகுலத்தாரும் அல்லாதவருமாகிய அன்பர் பலரின் நல்லிணக்கம் உதவியாக இருக்கின்றது; அவ்வெல்லா அன்பர்களும், அதிகாரப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு ஆவன செய்வோரும், மேற்குறித்த திரு. ஆ. கசபதியார் போன்ற பெருமக்களுமே தலைப்பில் சீரியர் என்று குறிக்கப் பெற்றிருக்கின்றனர்.

அ[illegible] பொறுப்பை ஏற்று ஆவன செய்[illegible] அன்பர்கள்: —

1. திரு. வேதாசல செட்டியார்,
31. நைனியப்பன் தெரு,
சென்னை 3.
—'கடவுள் வாழ்த்து'

2. திரு. சாந்தலட்சுமி அம்மையார்,
'சாம்பசிவ நிலையம்'
வடலூர்.
—'வான் சிறப்பு'

3. திரு. ஜெயலட்சுமி அம்மையார்,
காட்டாண்பாக்கம்,
புளிச்சப்பள்ளம் P. O.
தென்னாற்காடு வட்டம்
—'நீத்தார் பெருமை'

4. திரு. கமலம்மாள்,
ஷை
—'அறன்வலி யுறுத்தல்'

5. திரு. வள்ளியம்மையார்,
27. நமசிவாய முதலி தெரு,
வண்ணை, சென்னை 21.
—'விருந்தோம்பல்'

6. திரு. ஆ. சின்னப்பர்,
3-10 கற்பூர முதலி தெரு,
பெரியமெட்டு, சென்னை 3.
—'செய்ந்நன்றி அறிதல்'

7. செ. வச்சிரவேல் &
பார்த்த சாரதி,
1-46 இருளப்பன் தெரு,
சென்னை 1.
—'அடக்கமுடைமை'

8. திரு. சிவரத்தினம்மாள்,
3.பட்டுராசப்ப முதலி தெரு,
சென்னை 1.
—'ஒப்புரவு அறிதல்'

9. திரு. எதிராசம்மாள்,
7. பெரிய நெய்காரன் தெரு,
சென்னை 1.
—'அருளுடைமை'

10. திரு. K. V. மோஹன ரங்கம்,
29. சக்கரை செட்டித் தெரு,
சென்னை 1.
—'புலால் மறுத்தல்'

11. திரு. பொ. த. முனுசாமி,
18. மேயர் சிவசண்முகம் பிள்ளை தெரு,
தங்கம்பாக்கம்,
சென்னை 6.
—'தவம்'

12. திரு. ம. பாலசுப்பிர மணியம்,
ஷை
—'கூடாவொழுக்கம்'

13. திரு. V. G செல்வராசு,
52. கிருஷ்ணப்ப நாய்க்கன் குளத்துத் தெரு,
சென்னை 1.
—'வாய்மை'

14. சிவ. செல்வமாணிக்கம் மாள்,
2. முருகேச முதலி தெரு,
சென்னை 1.
—'நிலையாமை'

15. திரு. இராசேச்சுவரி யம்மாள்,
33. பெரியண்ண முதலி தெரு,
சென்னை 1.
—'துறவு'

16. திரு. க. உலகநாதன்,
10. முத்துகிருஷ்ணன் தெரு,
சென்னை 1.
—'மெய்யுணர்தல்'

17. திரு. மா. அண்ணாமலை,
46. விசயநாராணய தாஸ் ரோடு,
சென்னை 2
—'அவா அறுத்தல்'

18. திரு. கு. சோமசுந்தரம்,
10. மங்கம்மாள் தெரு,
ஏழு கிணறு, சென்னை 1.
—'கல்லாமை'

19. திரு. V. K. இராமசாமி முதலியார்,
3. சுலைவான் கார்டன் தெரு,
மயிலை, சென்னை 4.
—'கேள்வி'

20. திரு. ந. ரா. ஆடலரசு &
ந. இராமலிங்கம்,
20. சடையப்ப முதலி தெரு,
சைதை, சென்னை 15.
—'அறிவுடைமை'

21. திரு. முத்துசாமி,
54. இராமசாமி தெரு,
சென்னை 1
—'பெரியாரைத் துணைக்கோடல்'

22. திரு. க. மா. தங்கவேல்,
31. சு. மு. தெரு,
சைதை, சென்னை 15.
—'ஆள்வினை யுடைமை'

23. திரு. பி. வி. குப்புசாமி நாகம்மாள்,
24. குப்பு முத்து முதலி தெரு,
சென்னை 5.
—'குடிமை'

24. திரு. கே. பெருமாள்,
66. மணியக்கார சத்திரம் தெரு,
வண்ணை, சென்னை 21.
—'உழவு'

25. திரு. த. ஆறுமுகம்,
23. வரதராச முதலி தெரு,
சென்னை 17.
—'சான்றாண்மை'

26. திரு. ப. வேதாசலம்,
89. பிடாரியார் கோயில் தெரு,
சென்னை 1.
—'ஊடல் உவகை'

27. திரு பத்மாவதி அம்மாள்,
17. இராமகிருஷ்ணன் தெரு,
சென்னை 1.
—'ஊழ்'

பதித்[illegible] அச்சிட்டு வெளியிடுவோர்; தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)